திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, எல்லாத் துறைகளிலும் தமிழ் மணம் கமழச் செய்யும் நம்முடைய அரசு, மத்திய அரசு இந்தியிலும், ஆங்கிலத்திலும் கெஜட் அச்சிடுவதைப்போல் நமது அரசு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அச்சிடுவதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் ஏற்கனவே அறிவித்ததைப்போல், முதல் பாகத்தை முதலில் தமிழில் வெளியிட அரசு ஆணை பிறப்பித்து, அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மற்றைய மாநிலங்கள் வெளியிடும் அரசிதழ்கள் அந்தந்த மாநில மொழியிலே வெளியிடப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழக அரசாங்கம் தமிழிலே வெளியிடும் குறிப்புகள் ஏராளமாக இருக்கும்பொழுது, அதை ஆங்கிலத்திலே மட்டும் வெளியிடுவது தமிழை அமலாக்கும் கொள்கையில் அரசாங்கம் தாமதப்படுத்துகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, தமிழில் வெளியிட வேண்டுமென்ற கொள்கையில் அரசு தீவிரமாக இருப் பதால்தான் முதல் பாகத்தைத் தமிழில் வெளியிடுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தமிழக அரசு வெளியிடும் இந்த கெஜட் இருக்கிறதே, அதன் கடைசியான வெளியீடு எப்பொழுது வந்தது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக்கேள்வி போடவும்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் மருத்துவமனைகள்.

***461 வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் மருத்துவமனை கட்ட இருந்து கைவிடப்பட்ட திட்டங்கள் எவை ?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : (அ) & (இ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் நிதிப் பற்றுக்குறையின் காரணமாக கீழ்க்காணும் இடங்களில் மருத்துவமனை கட்டுவதற்கான திட்டங்கள் கைவிடப்பட்டுவிட்டன.

1971 டிசம்பர் 16]

திருச்சிராப்பள்ளி ;
திருப்பூர்;
விக்கிரமசிங்கபுரம் ;
தூத்துக்குடி ;
திருநெல்வேலி .
ராஜபாளையம் ;
சேலம்;
மேட்டூர் ;
உருக்குநோய் மருத்துவமனை, மதுரை ;
உருக்குநோய் மருததுவமனை, கோயமபுத்தூா ;
உருக்குநோய் மருத்துவமனை, சென்னை (2).

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்படி தொழிலாளர் மருத்துவமனைகளை அமைக்கும் காரியம் கடந்த நான்கைந்து ஆண்டுக்காலமாக நிறுத்தப்பட்டு விட்டது. நம்முடைய அரசாங்கம் ஈ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷனை வற்புறுத்தி, தொழிலாளர்கள் மிகுந்திருக்கும் திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட திட்டம் ஒன்று கைவிடப்பட்டிருக்கிறது, அதைக் கட்டுவதற்கு முயற்சியெடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, இதைப் பற்றி ஈட்டுறுதிக் கார்ப்பொரேஷனிடத்திலே நமது அரசாங்கம் கடிதப்போக்குவரத்திலேயும், நேரிடையே சந்தித்தும் வற்புறுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறுகிய கால வினா

கீழ் வெண்மணியில் அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்.

* **குறுகிய கால வினா எண் 2—திரு. டணலி சி. கந்தசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ் வெண்மணி கிராமத்தில் ஹரிஜனங்களுக்குக் காலனி அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் தாமதம் ஏற்படக் காரணம் என்ன ?

(இ) ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது பேய் மழையின் காரணமாக விடிமுந்து நிற்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) மேற்படி திட்டத்தில் தாமதம் ஏற்பட முக்கியமான காரணம் பின் வருமாறு. தீவிபத்தால் பாதிக்கப்பட்ட அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக உத்தேசிக்கப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்கள் 9—11—1969 அன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் அரசின் நில ஆர்ஜித உத்தரவின் மீது ரிட் மனு தாக்கல் செய்ததால், நில ஆர்ஜிதம் செய்வதற்குத் தாமதம் ஏற்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் 23—6—1971 அன்று அரசுக்கு அனுப்பிய